මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
MAHAPOLA HIGHER EDUCATION SCHOLARSHIP TRUST FUND
4 වන මහල, ජේ.ආර්.ජයවර්ධන මධ්‍යස්ථානය, 191, ධර්මපාල මාවත, කොළඹ 07, ශ්‍රී ලංකා
4ஆம் மாடி,ஜேஆர்ஜயவர்தன நிலையம்,191,தர்மபால மாவத்தை,கொழும்பு 07
4TH Floor, J.R. Jayawardene centre, 191, Dharmapala Mawatha, Colombo 07, Sri Lanka

මගේ අංකය / எனது இல / My No. MTF/1/1/I(2018/2019) ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2020

சங்கைக்குரிய தேரர் /திரு. /செல்வி.

**மஹபொலஉயர் கல்விபுலமைப் பரிசில் வழங்கல் - 2018/2019**

01. மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைப் பிரகாரம் சிறப்பு / சாதாரண புலமைப் பரிசிலை வழங்குவதற்கு நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

02.

(i) உங்களுடைய உயர் கல்வி நடவடிக்கைகளை பொருளாதார நெருக்கடிகளின்றி மற்றும் தடங்கல்களில்லாமல் தொடருவதற்கு வசதியளிப்பதற்கான உன்னத நோக்கத்திலேயே இப் புலமைப்பரிசில் உங்களுக்கு வழங்கப்படுகின்றது. அதற்கமைய, நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் கற்கைநெறிக்குரிய கால எல்லைக்குள் சிறப்புப் புலமைப் பரிசிலுக்குரியவருக்கு மாதாந்தம் ரூபா 5,050/- என்ற வீதத்திலும் சாதாரண புலமைப் பரிசிலுக்கு மாதாந்தம் ரூபா 5,000/- என்ற வீதத்திலும் கல்வியாண்டொன்றில் அதிகபட்சமாக 10 மாதாந்த தவணைகள் நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைப் பிரகாரம் மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் நேரடியாக உங்களுடைய வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படும். அவ்வாறு வைப்புச் செய்ப்பட்டதன் பின்னர் குறுஞ் செய்தி (எஸ் எம் எஸ்) ஊடாக உங்களுக்கு அறிவிக்கப்படும். (உங்களுடைய வங்கிக் கணக்கு பற்றிய விபரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இணைப்பு 02 இனைப் பூரணப்படுத்தல் வேண்டும்.)

(ii) தொழில் புரிதல் அல்லது தங்களின் சொந்த விருப்பம் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புலமைப்பரிசில் கொடுப்பனவை நிறுத்துமாறு தங்களால் கோரிக்கை விடுக்க முடியும்.

03. இப் புலமைப்பரிசில் தொடர்பான நிபந்தனைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அந்த நிபந்தனைகளை தயவுசெய்து கவனமாக வாசிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். புலமைப்பரிசிலை நீங்கள் ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்த நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டவராவீர்கள்.

04. மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகளினால் உங்களுடைய புலமைப்பரிசில் சம்பந்தமாக எதிர்காலத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டவராவீர்கள்.

05. **உங்களுடைய பல்கலைக்கழகம், பீடம், பதிவிலக்கம் ஆகியவற்றில் எதிர்காலத்தில் ஏற்படும் மாற்றங்களை தாமதமின்றி எனக்கு அறிவித்தல் வேண்டும். பல்கலைக்கழகம் அல்லது கற்கை நெறி மாற்றங்களின்போது அதுபற்றி அறிவிக்கப்படாதவிடத்து மாற்றலாகி வந்த இடத்தில் புலமைப்பரிசில் தவணைப் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாது.** உங்களுடைய புலமைப்பரிசில் இலக்கத்தை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கடிதத் தொடர்புகளின்போது குறிப்பிடுதல் வேண்டும். உங்களது கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அனைத்துக் கடிதத் தொடர்புகளும் உங்களுடைய பல்கலைக்கழகப் பதிவாளர் ஊடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06. மஹபொல புலமைப்பரிசில் வழங்கலுடன் தொடர்பான சம்பிரதாயத்திற்கமைய, அதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக **நீங்கள் தனிப்பட்ட வகையில் வருகைதந்து புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாதவிடத்து உங்களது புலமைப்பரிசில் இரத்துச் செய்யப்படும்.**

07. உங்களுடைய கல்வி சம்பந்தமான நடவடிக்கைகள் சகல வகையிலும் சிறப்பாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு - உண்மையுள்ள

**எம்.பராக்கிரம பண்டார**
பணிப்பாளர்
மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில்
நம்பிக்கை நிதியம்.

දුරකථන/ தொலைபேசி / Tel: 0112685011, ෆැක්ස්/ பெக்ஸ் / Fax: 0112675524 Web : www.mahapola.lk Email : mahapola@mahapola.lk

1981 අංක 66 දරන මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල පනත යටතේ ස්ථාපිතයි. மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியமானது 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகும் Established under Mahapola Higher Education Scholarship Trust Fund Act No.66 of 1981